Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 005 - நவம்பர் 7, 2021 முதல் நவம்பர் 13, 2021 வரை.**

## ஐந்தாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

நோயில்பூசுதல் அருளடையாளத்திற்காக (அருள்சாதனத்திற்காக) திருவழிபாட்டுப் பேராயம் தந்த நூலின் பெயர் என்ன? (திருவழிபாடு அருட்பணி ஞா. ரோலிங்டன் பக்கம் 96)

[ ] நோயாளிகளுக்கான பூசுதலும் அவர்களின் அருள்பணி நலனும்

[ ] நோயாளிகளின் அருள்வாழ்வு

[ ] அருள்வாழ்வும் நோயில்பூசுதலும்

[ ] நோயில்பூசுதலும் புதுவாழ்வும்

**கேள்வி 02**

நோயில்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) ஒருவருக்கு எத்தனை முறை அளிக்கலாம்? (திருவழிபாடு அருட்பணி ஞா. ரோலிங்டன் பக்கம் 97)

[ ] ஒருமுறை

[ ] இறப்பதற்குமுன்

[ ] அறுவை சிகிட்சைக்குமுன்

[ ] தேவையின் பொருட்டு பலமுறை

**கேள்வி 03**

நலமளிக்கும் அருளடையாளம் என்றழைக்கப்படுவது எது?
(திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 226)

[ ] திருமுழுக்கு

[ ] நற்கருணை

[ ] நோயில்பூசுதல்

[ ] ஒப்புரவு

**கேள்வி 04**

கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருளில் நம்மை பங்கேற்கச் செய்யும் ஒரு கருவி __________(திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 226)

[ ] நோய் [ ] துன்பம்

[ ] பாடுகள் [ ] ஒப்புரவு

**கேள்வி 05**

திருப்பட்டத்தின் பணியாளர் யார்? (தி. ச.1012)

[ ] திருத்தொண்டர்

[ ] அருள்பணியாளர்

[ ] மறைமவாட்ட முதன்மைக்குரு

[ ] ஆயர்

**கேள்வி 06**

ஆயர்குழாமின் தலைவர்/உரோமை தலைமைக்குரு யார்? (தி. ச.331)

[ ] கர்தினால்

[ ] பேராயர்

[ ] திருத்தந்தை

[ ] மூத்த கர்தினால்

**கேள்வி 07**

உரோமை தலைமைக்குருவின் தீர்ப்பிற்கு அல்லது ஆணைக்கு எதிராக ________________ கிடையாது (தி. ச.332-3)

[ ] மேல்முறையீடோ துணைநாடலோ

[ ] ஆயர் தீர்ப்பு

[ ] மறுமுறையீடோ

[ ] வரையறுப்பதோ

**கேள்வி 08**

உரோமை பொதுச்சங்கத்தை கூட்டுவதும், தலைமையேற்பதும் முடிவுகளை எடுப்பதும், அதை கலைப்பதும் அதன் ஆணைகளை அங்கீகரிப்பதும் ஆகிய உச்ச அதிகாரம் யாருக்கு ________________உரியது (தி. ச.338-1)

[ ] கர்தினால்

[ ] பேராயர்

[ ] மூத்த கர்தினால்

[ ] உரோமை தலைமைக்குரு/திருத்தந்தை

**கேள்வி 09**

உரோமை தலைமைக்குருவாக/திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆயராக இல்லாதிருப்பின் அவருக்கு ஆயர்பட்டம் அளிப்பது யாருக்கு_______ உரியது (தி. ச.355-1)

[ ] கர்தினால் முதல்வருக்கு

[ ] பேராயர்

[ ] கர்தினால் துணை முதல்வர் கர்தினால்

[ ] ஆயருக்கு

**கேள்வி 10**

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உச்சத் தலைமைக்குருவின் பெயரை/திருத்தந்தையின் பெயரை ____________________ மக்களுக்கு அறிவிக்கிறார். (தி.ச. 355-2)

[ ] கர்தினால்கள் அணியின் முதல்வர்

[ ] திருத்தொண்டர்கள் அணியின் முதல் கர்தினால்

[ ] ஆயர்கள் அணியின் முதல் கர்தினால்

[ ] பேராயர்

**கேள்வி 11**

சட்டமுறைமையான தடை குறுக்கிட்டாலன்றி, ஆயராக உயர்த்தப்பட்டுள்ள ஒருவர், அவர் ஏற்கெனவே ஆயராக திருநிலைப்படுத்தப்படவில்லையெனில், திருத்தூதரகக் கடிதத்தை பெற்றுக்கொண்ட ______________ மாதங்களுக்குள் திருச்சபை சட்டமுறைப்படி தமது மறைமாவட்டத்தின் பொறுப்பை ஏற்கவேண்டும். (தி. ச.382-2)

[ ] நான்கு

[ ] ஐந்து

[ ] மூன்று

[ ] இரண்டு

**கேள்வி 12**

_______________வயதை நிறைவு செய்த ஒரு மறைமாவட்ட ஆயர் தமது பணித்துறப்பை உச்சத் தலைமைக்குருவிடம் கையளிக்கும்படி கேட்டுக்கொள்கிறார். (தி. ச.401-1)

[ ] 70

[ ] 76

[ ] 75

[ ] 80

**கேள்வி 13**

ஒரு மறைமாவட்ட ஆட்சிப்பீடம் ஆயரின்றி உள்ளது என்ற அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட _______ நாள்களுக்குள், ஆலோசகர் குழாமினால் ஒரு மறைமாவட்ட நிர்வாகி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். (தி. ச.421-1)

[ ] 10

[ ] 8

[ ] 12

[ ] 6

**கேள்வி 14**

ஆயர் நிலைக்குத் தகுதியான வேட்பாளராக ஒருவர் இருக்கத் தேவையானவை தகுதிகளில் இரண்டு: (தி. ச.378-1)

[ ] குறைந்த அளவு முப்பத்தைந்து வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் குருப்பட்டம் பெற்று குறைந்த அளவு ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

[ ] குறைந்த அளவு முப்பதி நான்கு வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் குருப்பட்டம் பெற்று குறைந்த அளவு ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

[ ] குறைந்த அளவு முப்பத்தைந்து வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் குருப்பட்டம் பெற்று குறைந்த அளவு நான்கு ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

[ ] குறைந்த அளவு முப்பத்தி நான்கு வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் குருப்பட்டம் பெற்று குறைந்த அளவு நான்கு ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

**கேள்வி 15**

மறைமாவட்டக் குருக்களின் பாதுகாவலர் என்று அழைக்கப்படும் புனிதர் பெயர் கூறுக.

[ ] புனித லொயோலா இஞ்ஞாசியார்

[ ] புனித ஜான் மரிய வியான்னி

[ ] புனித பெர்க்மான்ஸ்

[ ] புனித டோமினிக் சாவியோ

**கேள்வி 16**

ஒருவர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட எது முக்கியமாக தேவைப்படுகிறது (தி. ச.1013)

[ ] மறைமாவட்ட ஆயரின் ஆணை

[ ] பேராயரின் ஆணை

[ ] கர்தினாலின் ஆணை

[ ] திருத்தந்தையின் ஆணை

**கேள்வி 17**

திருத்தொண்டர் திருப்பட்டத்திற்கும் குருத்துவத் திருப்பட்டத்திற்கும் இடையே குறைந்த அளவு எத்தனை மாத இடைவெளி இருக்க வேண்டும்? (தி. ச.1031-1)

[ ] இரண்டு மாதங்கள்;

[ ] மூன்று மாதங்கள்

[ ] ஆறு மாதங்கள்

[ ] ஐந்து மாதங்கள்

**கேள்வி 18**

ஒருவர் குருத்துவ திருப்பட்டம் பெறுவதற்கு எத்தனை வயது நிறைவு செய்து இருக்க வேண்டும் (தி. ச.1031-1)

[ ] 23 வயது

[ ] 22 வயது

[ ] 25 வயது

[ ] 24 வயது

**கேள்வி 19**

திருமணமான ஒருவர் நிரந்தரத் திருத்தொண்டர் திருப்பட்டம் பெறுவதற்கு எத்தனை வயது நிறைவு செய்து இருக்க வேண்டும் (தி.ச.1031-2)

[ ] 30 வயது

[ ] 35 வயது

[ ] 32 வயது

[ ] 31 வயது

**கேள்வி 20**

ஒருவருக்கு பீடத்துணைவர் பணியையும் திருத்தொண்டர் திருப்பட்டத்தையும் வழங்குவதற்கு இடையில் எத்தனை மாத இடைவெளி இருக்க வேண்டும்? (தி.ச.1035-2)

[ ] இரண்டு மாதங்கள்;

[ ] மூன்று மாதங்கள்

[ ] ஆறு மாதங்கள்

[ ] ஐந்து மாதங்கள்

**கேள்வி 21**

குருத்துவத் திருப்பட்டம் பெறக் குறிக்கப்பட்டவர்கள் எத்தனை வயது நிறைவான பிறகே திருத்தொண்டர் திருப்பட்டத்திற்கு அனுமதிக்கப்டுவார்கள் (தி. ச.1031-1)

[ ] 23 வயது

[ ] 22 வயது

[ ] 21 வயது

[ ] 20 வயது

**கேள்வி 22**

"ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் அருள்பொழிவு செய்யப்பட்டவரே" என்று சொன்ன புனிதர் யார்? (திருவழிபாடு அருட்பணி ஞா. ரோலிங்டன் பக்கம் 98)

[ ] புனித பெர்க்மான்ஸ்

[ ] புனித அம்புரோஸ்

[ ] புனித சிறில்

[ ] புனித தார்சியுஸ்

**கேள்வி 23**

ஆயர் திருநிலைப்பாட்டு நிகழ்வில் எத்தனை ஆயர்கள் சேர்ந்து ஆயர் நிலைக்கு தேர்வு செய்யப்பட்டவரே திருநிலைப்படுத்துவார்கள் ( )

[ ] 10

[ ] 5

[ ] 3

[ ] 4

**கேள்வி 24**

ஆயர் திருப்பட்டம் பெறுவோருக்கு கிறிஸ்மா தைலம் எங்கு பூசுவார்கள் (திருவழிபாடு அருட்பணி ஞா. ரோலிங்டன் பக்கம் 99)

[ ] தலையில்

[ ] வலது கையில்

[ ] நெற்றியில்

[ ] இரு கைகளில்

**கேள்வி 25**

குருத்துவத் திருப்பட்டம் பெறுவோருக்கு திருத்தைலம் எங்கு பூசுவார்கள் (திருவழிபாடு அருட்பணி ஞா. ரோலிங்டன் பக்கம் 99)

[ ] தலையில்

[ ] வலது கையில்

[ ] நெற்றியில்

[ ] கைகளில்

---

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.

---